DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC 449/2026**

Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Pradeep Kumar | Caste | : | |
| Father Name | : | Rangasamy | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 35 |
| Time | : | | | | |

**(A1, A2 present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **19.06.2026**

**19.06.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது எடப்பள்ளி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ காலகட்டத்தில் 06.04.2026 ம் தேதி குன்னூர் நகர் கிராம நிர்வாக அலுவலர் விடுப்பில் சென்றதால் நான் அன்றைய தினம் குன்னூர் நகர பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த போது நானும் எனது கிராம உதவியாளர் அப்துல் மஜித்தும் இருசக்கர வாகனத்தில் மவுண்ட் ரோட்டில் சென்றுகொண்டிருக்கும் போது ஒய்.எம்.சி.ஏ வளைவு, அரசு மருத்துவமனை வளைவு, வண்டிப்பேட்டை, அண்ணாசிலை ஆகிய இடங்களில் திமுக நகர செயலாளர் ராமசாமி மற்றும் அவருடன் வந்த சுமார் 2500 கட்சி உறுப்பினர்கள் பட்டாசு வெடித்தார்கள்.

2. அந்த 2500 நபர்களில் ஆஜர் எதிரிகளும் இருந்தார்கள். தேர்தல் சமயத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால் பட்டாசு வெடிப்பது தவறு என நான் குன்னூர் நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் (**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.ஆ.1 புகாரை நான் கிராம நிர்வாக அதிகாரி என்ற முறையில் கொடுத்தேனா அல்லது தேர்தல் அதிகாரி என்ற முறையில் கொடுத்தேனா என்றால் சார் ஆட்சியர் அறிவுறுத்தியதால் அ.சா.ஆ.1 புகார் கொடுத்தேன். தேர்தல் நடத்தைவிதிமுறைகள் அமலுக்கு வந்த பிறகு அது முடியும் வரை நாங்கள் தேர்தல் ஆணையத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்கள் தான் என்றால் சரிதான். தற்போது நான் தமிழக அரசின் கீழ் பணிபுரியும் ஊழியர் என்றால் சரிதான். இந்த வழக்கை தொடுக்கவும், தொடர்ந்து நடத்தவும் நான் தேர்தல் ஆணையத்திடமிருந்து எவ்வித அனுமதியும் பெறவில்லை என்றால் சரிதான்.

2. குறிப்பிட்டு யார் பட்டாசு வெடித்தார்கள் என எனது புகாரிலோ போலிஸ் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல. நான் யாரையும் அவ்வாறு குறிப்பிட்டு கூறவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பட்டாசு வெடித்த பின் மிஞ்சியிருக்கும் துகள்கள் போன்றவற்றை நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

3. பட்டாசு வெடித்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் புறக்காவல் நிலையத்திற்கும் இடையே உள்ள தூரம் 10 மீட்டர் தான் என்றால் சரிதான். அங்கு பந்தோபஸ்தில் இருந்த போலிசார் பட்டாசு வெடிப்பதை தடுக்க எதுவும் செய்யவில்லை என்றால் கூட்டம் அதிகமாக இருந்ததால் அவர்களால் கட்டுப்படுத்த இயலவில்லை. அங்கு நான் போலிசாரிடம் எந்த புகாரும் அளிக்கவில்லை என்றால் சரிதான். தேர்தல் நடத்தை விதிமுறைகள் அந்த சமயத்தில் அமலில் இருந்தது என்பதை காண்பிக்க எந்தவொரு உத்தரவையும் நான் எனது புகாருடன் இணைக்கவில்லை என்றால் சரிதான்.

4. நான் சார் ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி தான் இந்த புகாரைகொடுத்தேன். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவொரு சம்பந்தமுமில்லை என்றும், தேர்தல் அதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில்

புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதே போல் பொதுவாக நான் 2500 நபர்கள் அந்த இடத்தில் இருந்ததாக கூறியுள்ளேன் என்றும், யார் யார் என குறிப்பாக யாரையும் பெயர் சொல்லி புகாரில் கூறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சாட்சிகளின் பெயர் விவரங்களை எனது புகாரில் கூறவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.